| | **வானிலை சார்ந்த வேளாண் ஆலோசனை அறிக்கை**<br>இணைந்து வழங்குபவர்கள்<br>பிராந்திய வானிலை மையம் சென்னை - இந்திய வானிலைத் துறை<br>ம. சா. சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் மற்றும்<br>ரெட்டியார்சத்திரம் விதை உற்பத்தியாளர்கள் சங்கம் | | | | | |
|---|---|---|---|---|---|---|
| மாவட்டம் : | **சிவகங்கை** | காலம் : | **20/03/2024** | முதல் | **24/03/2024** | |
| அறிக்கை எண் : | **023/ 2024** | வெளியீட்டு நாள் : | **19/03/2024** | | | |

### சிவகங்கை மாவட்டத்தின் கடந்த வார வானிலை

பெரும்பாலான பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை 38°-39° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 24°-26° செல்சியஸ் ஆகவும் பதிவானது.

| **கடந்தவார வானிலை** (14.03.2024 **முதல்** 18.03.2024) | | | | | | **அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு –24-03-2024- 08.30 வரை** | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 14/03 | 15/03 | 16/03 | 17/03 | 18/03 | தேதி | நாள்-1 20/03 | நாள்-2 21/03 | நாள்-3 22/03 | நாள்-4 23/03 | நாள்-5 24/03 |
| 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | மழை (மி.மீ) | 0 | 8 | 6 | 10 | 1 |
| 38 | 39 | 38 | 38 | 38 | அதிக பட்ச வெப்பநிலை (செல்) | 38 | 38 | 37 | 38 | 38 |
| 23 | 26 | 25 | 25 | 24 | குறைந்த பட்ச வெப்பநிலை (செல்) | 25 | 25 | 24 | 25 | 25 |
| 1 | 4 | 4 | 3 | 3 | மேக மூட்டம் (ஆக்டா) | 3 | 5 | 5 | 4 | 3 |
| 57 | 78 | 85 | 78 | 75 | அதிக மற்றும் குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (சதவீதம்) | 80 | 84 | 85 | 78 | 76 |
| 28 | 38 | 36 | 34 | 39 | | 40 | 44 | 46 | 42 | 40 |
| 7 | 6 | 6 | 8 | 5 | காற்றின் வேகம் (கி.மீ/மணி ) | 10 | 10 | 8 | 10 | 12 |
| கிழக்கு | தென் கிழக்கு | தென் கிழக்கு | தென் கிழக்கு | கிழக்கு | காற்றின் திசை | **கிழக்கு** | **கிழக்கு** | **கிழக்கு** | **வட கிழக்கு** | **வட கிழக்கு** |

### குறுஞ்செய்தி :

மாவட்டத்தின் ஒரு சில இடங்களில் மார்ச் 21, 23 தேதி மிதமான மழையும் மற்றும் 22, 24 தேதி லேசான மழைக்கு வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்பநிலையானது 37°-38° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலையானது 24°-25° செல்சியஸ் ஆகவும் பதிவாகலாம். வானம் மிதமான மேகமூட்டத்துடன் காணப்படும். மணிக்கு 8 முதல் 12 கி.மீ வேகத்தில், கிழக்கு மற்றும் வடகிழக்கு திசைகளிலிருந்து காற்று வீசக்கூடும்.

### பொது ஆலோசனை:

**கால்நடை வளர்ப்பு :**

கால்நடை வளர்க்கும் விவசாயிகள் கோடை காலங்களில் ஏற்படும் தீவனப்பயிர்கள் பற்றாக்குறையினை தவிர்க்கும் வகையில் பாசன வசதியுள்ள விவசாயிகள் 10 சதவீத நிலத்தில் கம்பு நேப்பியர் போன்ற தீவனப்பயிர்களை சாகுபடி செய்யலாம்.

**விவசாயம் :**

அடுத்த 5 நாட்களுக்கு மணிக்கு 8 முதல் 12 கி.மீ. வேகத்தில் காற்று வீசும் என

நடவடிக்கைகளை மேற்க்கொள்ளவும். கொடிவகை பயிர்களில் பந்தல்களில் துருபிடித்து பழுதடைந்துள்ள கம்பிகள் மற்றும் தூண்களை கண்டறிந்து சரி செய்யவும். போதுமான முட்டுகளை கொடுக்கவும். பயிர்களுக்கு மருந்து தெளிக்கும் வேலைகளை ஒத்திவைக்கவும்.

**எதிர்பார்க்கப்படும் வானிலைக்கேற்ற வேளாண் ஆலோசனைகள்**
**முக்கிய பயிர்கள் : கத்தரி, மா, கால்நடை**

**கத்தரி:**
நிலவும் பருவச்சூழ்நிலையில் கத்திரி பயிரில் கண்ணாடி இறக்கைப் பூச்சியின் தாக்குதல் தென்பட வாய்ப்பு உள்ளது.

இவ்வகைப் பூச்சியின் தாக்குதலால் இலைகள் மஞ்சள் நிறமாய் மாறி விடும். சேதமடைந்த இலைகளானது பூச்சியின் உரித்த தோல் மற்றும் கழிவுகளால் மூடியிருப்பதைக் காண முடியும்.

ஒரு டேங்கிர்க்கு 15 மில்லி என்ற அளவில் இமிடாகுளோபிரிடு மருந்தினை தண்ணீரில் கலந்து தெளித்து கட்டுப்படுத்தலாம்.

**மா:**
மா பயிரில் சாம்பல் கருகல் நோய் தாக்குதல்; பரவலாக தென்படுகின்றது. நோய் தாக்குதலின் காரணமாக இலைகளில் நுனி மற்றும் விளிம்புகளில் பழுப்புப் நிற புள்ளிகள் உருவாகும். புள்ளியின் அளவு அதிகமாகி, அடர் பழுப்பு நிறமாகிறது.

இதனைக் கட்டுப்படுத்த 10 லிட்டர் தண்ணீருக்கு 30 கிராம் காப்பர் ஆக்ஸிகுளோரைடு மற்றும் 20 கிராம் கார்டாப் ஹைட்ரோ குளோரைடு உடன் 10 மில்லி ஒட்டுப்பசை கலந்து தெளிக்கலாம்.

**கால்நடை:**
விவசாயிகள் தங்கள் கோழிகளை கழிச்சல் நோயிலிருந்து காப்பாற்ற, நோய் தாக்கப்பட்ட கோழிகளை தனியாக பிரித்து வைத்து பராமரிக்க வேண்டும்.

பின் நோய் பாதிக்கப்பட்ட மற்றும் பாதிக்கப்படாத கோழி மற்றும் குஞ்சுகளுக்கு 1 லிட்டர் தண்ணீரில் 2 கிராம் மைக்ரசால் பவுடர் அல்லது 2 கிராம் பேக்டிரிசால் பவுடர் மருந்துகளில் ஏதேனும் ஒன்றுடன் 5 மில்லி வைம்ரால் சிரப் இரண்டையும் கலந்து 5 நாட்களுக்கு காலை மாலை என 2 வேளை குடிக்க வைக்க வேண்டும்.